| | |
|---|---|
| அ.வ.எண் | 395/2012 |
| பெயர் | பழனியப்பன் |
| தந்தை பெயர் | குப்பண்ணக்கவுண்டர் |
| சாட்சி | வா.சா.1 |
| நாள் | 15.11.2019 |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4ம் பிரதிவாதி அம்மாசி இறந்த அன்றே எனக்கு அந்த சங்கதி எனக்கு தெரியும் என்றால் ஆமாம். அவர் இறந்து 40 நாட்கள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் அவர் இறப்பதற்கு முன்பே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். 4ம் பிரதிவாதி இறப்பதற்கு முன்பே வழக்கு தாக்கல் செய்துவிட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எந்தெந்த சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய தகப்பனாரின் சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன சர்வே எண், எவ்வளவு விஸ்தீரணம் என்பது தெரியுமா என்றால் 2ஏக்கர் 5 சென்ட் பட்டா என்னுடைய தகப்பனார் பெயரில் ஏற்பட்டுள்ளது. அந்த 2 ஏக்கர் 5 சென்டிற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். 2012ல் வழக்கு தாக்கல் செய்யும் போது எவ்வளவு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 66 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அதன் பிறகு சொத்து விடுபட்டுவிட்டதால் அதனை சேர்த்துள்ளேன். அந்த 2 ஏக்கர் 5 சென்டில் 66 சென்ட் போக மீதி சொத்துக்களுக்கும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மொத்தமாக 2ஏக்கர் 5 சென்டிற்கும் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். திருத்தும் போது 32 சென்டை தான் சேர்த்து திருத்தியுள்ளேன் எனவும், மொத்தம் 1 ஏக்கருக்குள் தான் வரும் எனவும், மொத்தம் 2 ஏக்கர் 5 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தாயார் 2012ல் வழக்கு தாக்கல் செய்த சில மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் இறந்ததற்கு பின்பு தான் வழக்கு தாக்கல் செய்தேன். என்னுடைய தாயார் இறப்பதற்கும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும், 2005ம் ஆண்டில் 65 சென்டை பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை எழுதிவைத்தார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தாயார் பெயரில் எவ்வித

சொத்தும் இல்லை. அது பூர்வீக சொத்து. என்னுடைய தாயார் 2012 ல் இறந்ததற்கு பின்னிட்டு உயில் நடைமுறைக்கு வந்து 3 ம் பிரதிவாதிதான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 11.07.2012 ல் 3 ம் பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளுக்கு ரூ.1,00,000/- பெற்றுக் கொண்டு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. கிரையம் செய்த நாள் முதல் 65 சென்டை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் அனைத்து சொத்துக்களும் அவர்களுடைய அனுபவத்தில் தான் உள்ளது. 3 ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்ததாகவும், 3 ம் பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையபத்திரம் எழுதி கொடுத்ததாக வழக்குரையில் கூறியுள்ளது எனக்கு எப்போது தெரியும் என்றால் பாகம் கேட்டு கொடுக்க மாட்டேன் என கூறியதால் அது குறித்து நகல் எடுத்து பார்த்த போது தான் எனக்கு தெரிய வந்தது. பாகம் யார் யாரிடம் என்னென்ன சொத்து குறித்து பாகம் கேட்டேன் என்றால் அனைத்து சொத்துகளுமான 2 ஏக்கர் 5 சென்ட் குறித்து பாகம் கேட்டேன். யார் யாரிடம் பாகம் கேட்டேன் என்றால் என்னுடைய அண்ணனிடம் பக்கத்து காட்டுக்காரர் முன்னிலையில் கேட்டேன். பாகம் பிரித்து தர கோரி வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். பாகமே இல்லை என கூறிவிட்டார்கள் அதன் பிறகு தான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் 1 ம் பிரதிவாதியிடம் பாகமே கேட்கவில்லை எனவும், ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது எனவும் ஆகவே நான் பாகம் கேட்டேன் என கூறுவது பொய் என்றால் சரியல்ல. சர்வே எண்.28/3 ல் எனக்கு சொத்துக்கள் உள்ளதா என்றால் சர்வே எண் தெரியாது. வழக்கில் சர்வே எண்.28/3 என குறிப்பிட்டுள்ள சொத்து பூர்வீக சொத்து என்றால் சர்வே எண் குறித்து எனக்கு தெரியாது. 2006 ல் நானும், என்னுடைய மனைவியும், மகனும் சேர்ந்து ராஜாத்திக்கு 20 சென்டை எழுதி கொடுத்தோம் என்றால் எனக்கே பாகம் பிரியவில்லை. ஆகவே நான் எழுதி கொடுத்தால் ஏன் பாகம் கேட்கிறேன். ராஜாத்தி பெயரில் சொத்து எழுதிவைக்கவில்லை என்றால் எழுதிவைக்கவில்லை. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் போது பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் பாகம் பிரித்து கொடுக்கவில்லை. மேற்படி பாகம் பிரித்துகொடுத்ததற்கு பின்னிட்டு என்னுடைய பாகத்தை நானும், 1 ம் பிரதிவாதியின் பாகத்தை அவரும் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. வழக்குரையில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என கூறிவிட்டு தற்போது பொய்யாக கூறுகிறேன் என்றால் இல்லை. வழக்குரையில்

வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக கூறவில்லையா என்றால் ஆமாம். ஏற்கனவே குடும்ப சொத்துக்களை பாகம்பிரித்ததற்கு பின்னிட்டு பாகம் பிரிக்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கில் கண்டுள்ள 65 சென்ட் நிலம் என்னுடைய தாயாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டு அனுபவித்த வந்த சொத்து என்றால் இல்லை. அவர் 3ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிவைத்தது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. 3ம் பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்தது குறித்தும் நான் கேள்வி எழுப்பமுடியாது என்றால் சரியல்ல. நான் 2 ஏக்கர் 5 சென்ட் என கூறிவிட்டு அதற்கு குறைவான சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பகுதி பாக பிரிவினை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. வழக்கில் கூறியுள்ள கதவு எண் யாருடையது என்பது எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய வீட்டின் கதவு எண் மட்டும் தெரியும். அந்த விவரங்கள் என்னுடைய அண்ணனிடம் உள்ளது. என்னுடைய வீட்டின் கதவு எண்.10/223 என வா.சா.ஆ-7 ல் குறிப்பிட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த 10/223 என்ற கதவு எண் வழக்கில் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். மின் இணைப்பு எண்.366 குறித்த வா.சா.ஆ-8 மின் கட்டண ரசீது என்றால் ஆமாம். வழக்கு சொத்து விபரத்தில் மின் கட்டண எண் வழக்கில் கூறவில்லை என்றால் ஆமாம். எனக்கு பாகம் மூலம் பிரிந்த சொத்துக்கள் எதையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு பாகம் பிரிந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறேன் எனவும், அதற்காக தான் வா.சா.ஆ.7, 8 மற்றும் கந்தாய ரசீதுகள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய பெயரில் ஒரு வீடு உள்ளது என்றால் என்னுடைய தகப்பனார் கொட்டகை தான் போட்டு கொடுத்துள்ளார். அந்த வீட்டின் வரி என்னுடைய பெயரில் எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் வரி கட்டுவது இல்லை ஆகவே ஞாபகமில்லை. வாய்மொழி பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்டு அந்த வீட்டிற்கு 30 வருடங்களாக வரி செலுத்தி வருகிறேன் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தனியாக வீடு கட்டி தன்னுடைய குடும்பத்தாருடன் குடியிருந்து வருகிறார் என்றால் அது என்னுடைய தகப்பனார் போட்டு கொடுத்த கொட்டகை தான். 1ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு வரி, மின் இணைப்பு அவர் பெயரில் உள்ளது என்றால் வீட்டு வரி யார் பெயரில் உள்ளது என்பது தெரியாது. மின் இணைப்பு அவர் பெயரில் தான் உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு அட்டை போட்ட வீடு உள்ளது. அது

என்னுடைய தகப்பனார் கொடுத்தது. நான் கூறுவது பொய் எனவும், 1 ம் பிரதிவாதி தனியாகவும், நான் தனியாகவும் வீடு கட்டி அனுபவித்து வருகிறோம் என்றால் இல்லை. புதிதாக சேர்க்கப்பட்ட 28 செனட் நிலத்தில் தென்பாதி 14 செனட் 1 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது எனவும், அதில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் நானும் குடியிருக்கிறேன். மொத்த சொத்தும் 1 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது. எந்த நிலத்தையும் நான் ஓட்டவில்லை. சர்வே எண்.29/10 பி-ல் உள்ள 28 செனட் நிலத்தில் தென்பாதி 14 செனட் 1 ம்பிரதிவாதி அனுபவத்திலும், வடபாதி பங்காளி வகையறாவை சேர்ந்த சின்னபையன் மகன் மணி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வடபாதி சொத்தில் மணி என்பவர் கூரைவீடு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை. மணி என்பவரின் சொத்துக்களையும் தவறாக இவ்வழக்கில் சேர்த்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. மல்லகவுண்டர் நிலத்திற்கு மேற்கு, பெருமாள் நிலத்திற்கு கிழக்கு, மாரியம்மாள் நிலத்திற்கு வடக்கு, மாரியப்பன் நிலத்திற்கு தெற்கு இதன் மத்தியில் உள்ள 10 செனட் நிலம் மணியின் அண்ணன் பழனிசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் அவர்களுடைய சொத்து அவர்களுக்கு தான் பாத்தியப்பட்டது. மேற்படி 10 செனட் நிலம் தான் வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கில் கூறியுள்ளது தவறு என்றால் சண்டையிடும் வேண்டும் என்பதற்காக எழுதி கொடுத்துவிட்டார்கள். சர்வே எண்.29/10 பி-ல் உள்ள கதவு எண்.10/233, 10/224 ஆகிய வீடுகளும், மின் இணைப்பு எண்கள்.480, 660, 140 ஆகியவை எனக்கோ, பிரதிவாதிகளுக்கோ பாத்தியப்படாத சொத்துக்கள் என்றால் சரியல்ல. தேவையில்லாமல் 3 ம் தரப்பினர்களின் சொத்துக்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளதால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு பரம்பரை சொத்துக்களிலிருந்து பாகம் கிடைத்த சொத்துக்களை இவ்வழக்கில் வேண்டும் என்றே சேர்க்காததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எங்களுடைய குடும்ப சொத்தான 35 செனடில் 17 1/2 செனட் நானும், 17 1/2 செனடை 1 ம் பிரதிவாதியும் அனுபவித்து வருகிறார் என்றால் நான் எந்த சொத்தையும் அனுபவிக்கவில்லை. மேற்படி 17 1/2 செனடில் தான் வீடு உள்ளது எனவும், அதில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் அதில் கொட்டகையே இல்லை. 3 முதல் 5 பிரதிவாதிகளை எதற்காக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் என்னுடைய தகப்பனாரின் வாரிசுகள் என்பதால்

சேர்த்துள்ளேன். என்னுடைய தகப்பனாரின் குடும்ப சொத்துக்களில் அவர்களுக்கும் பாகம் உள்ளது என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் இருக்கும் போதே ஒவ்வொருவருக்கும் 10 பவுன் நகை போட்டு சீர்வரிசை செய்துள்ளார். ரூ.10,000/-மும் கொடுத்துள்ளார். 10 பவுன் மற்றும் ரூ.10,000/- கொடுத்ததை வழக்குரை மற்றும் சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா இல்லை. நான் வழக்கிற்காக இட்டுக்கட்டி கூறுகிறேன் என்றால் சரியல்ல. பாகம் பிரியவில்லை என வாதுரைத்துள்ளதால் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்தில் பாகம் உள்ள நிலையில் எனக்கு 1/2 பாகம் வேண்டும் என கூறுவது தவறு என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே அவரவர்களுக்கு பாகம் பிரிந்த சொத்துக்களை தனிதனியாக அனுபவித்து வருகிறோம் எனவும், தேவையில்லாமல் பாகபிரிவினை வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதால் 5 முதல் 8 பிரதிவாதிகள் வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. 65 செண்ட் இடம் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தனிசொத்து என்பதால் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்துக்கள் குறித்து சரியான தகவல்களை கொடுக்காததால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல எனவும், வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**ஓம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டுர்.**